# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## காயல்பட்டணம்

## சர்வதேச யோகா தினம்

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் அணி (NSS) எண் 187-ன் சார்பாகவும், இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின் (YRC) சார்பாகவும் 20.06.2019 அன்று தேசிய யோகா தினம் கடைபிடிக்கப்பட்டது. இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக தூத்துக்குடி மாவட்ட சித்த மருத்துவ அதிகாரி மருத்துவர் இரா. இராஜசெல்வி அவர்கள் கலந்து கொண்டார். எம் கல்லூரியின் உதவிப் பேராசிரியரும் இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான திருமதி ஆ. இராஜலட்சுமி M.Com., M.Phil., SET வரவேற்புரை வழங்கினார். எம் கல்லூரியின் முதல்வர் முனைவர் R.C. வாசுகி M.A., Ph.D., DGT அவர்கள் முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினர் அவர்கள் மகளிர் நலனில் சித்த மருத்துவம் என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை மருத்துவர் மா.இரதிசெல்வம் MD(S) அவர்கள் மங்கையர் மனநலம் என்பதைப் பற்றியும், இளம் வயதில் பெண்கள் மேற்கொள்ளும் பிரச்சனைகள் பற்றியும், காயல்பட்டணம், அரசு மருத்துவமனை மருத்துவர் மு. முருகபொற்செல்வி MD(S) அவர்கள் மங்கையர் மலர் மருத்துவம் என்னும் தலைப்பில் மகளிரின் வாழ்க்கையில் மலர்களின் மகத்துவத்தைப் பற்றியும், கோவில்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர். ர. அபிநயா MD(S) அவர்கள் மகளிர் நலனுக்கான இணை உணவுகள் என்னும் தலைப்பிலும், பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் ஆரோக்கியத்தைப் பற்றியும், எட்டயபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் ஷெ. ஜன்னத் ஷெரிப் MD(S) அவர்கள் மகளிர் நோய்களும் சித்த மருத்துவ தீர்வுகளும் என்னும் தலைப்பிலும் பேசி மாணவிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் எம் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட (NSS) மாணவிகள் மற்றும் இளைஞர் செஞ்சிலுவை சங்க (YRC) மாணவிகள் அனைவரும் யோகா பயிற்சிகளை மேற்கொண்டனர். எம் கல்லூரியின் உதவிப் பேராசிரியரும் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளருமான செல்வி த. கோகிலா ஜெனிபர் M.Sc., B.Ed அவர்கள் நன்றியுரை வழங்கினார். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நடைபெற்று முடிந்தது.